
ஓலை 46 | ஓசை 162 | துலை (அக்டோபர்) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்**
**தாற்றின் அடங்கப் பெறின்.**

அறிய வேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி ஒழுகப்பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும்.

**Translation:**

If versed in wisdom's lore by virtue's law
you self restrain
Your self-repression known
will yield you glory's gain.

**Explanation:**

Knowing that self-control is knowledge, if a man should control himself, in the prescribed course, such self-control will bring him distinction among the wise.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல

## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

# தீயவர்களுக்கு உதவினாலும் தீங்கு வரும்

## பா வகை: நேரிசை வெண்டாழிசை

செய்யும் உதவி சேருமிடம் அங்கே
பொய்த்திடும் தீயோர் புறத்தில் - நெய்தால்
கொய்த்திடும் நம்மையே கொணர்ந்து

நன்றி மறந்திடும் நஞ்சுள்ளம் தருமே
துன்பம் அலையாய் தொடர்ந்து - வன்னம்
சின்னமாய் மாற்றும் சிறை

வலிதீர்க்கும் நெஞ்சம் வளமடையும் உதவி
புலிகட்குச் செய்தால் புண்ணாகும் - மெலிந்தே
*ஒலிக்கும் உள்ளே உடைந்து

*ஒலி - இரைச்சல்

களர்நிலத்தில் விதைத்தால் கண்முளைக்கா விதையே
உளமிலார் தீயோர்க் குதவுதலும் - களையாம்
விளையும் இடரே விரைந்து

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# காவிரி

உலகத்து உயிர்களுக்கெல்லாம்
எழுதித்தரப்பட்டது இயற்கை
பரம்பரை சொத்தாயெண்ணிப்
பங்காளிச் சண்டையிடும்
பாவக்கால்களை
நீ நனைத்தது போதும்

கடலில் கைகோர்த்த நீ
வயல்வெளி பாதையில்
பின்னோக்கிப் பாய்ந்தோடிப்
காடு மலை திரும்பித்
தலைக்காவிரி ஊற்றில்
வற்றி மடி



இன்னொரு முறை பிறந்து வா
தமிழ்ப்பூமியில்
எல்லோரையும் வாழவைப்போம்

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# அன்பே! அத்தனையும்

மனித உறவுகளிடம்
மனிதன் தேடுவது
அனைத்தும் அன்பே
அரவணைக்கும் அனுசரிக்கும்.

மனிதர் இடையே
மனிதன் காட்டுவது
அன்பொன்றே அகிலம்
ஆளும் தன்மைத்து.

இன்ப துன்பங்கள்
இடையே வாழ்க்கை
அன்பாக இருப்பதே
அன்பென்று உணர்க.



இயல்பாய் நடந்திட
இதமாய் இருப்பது
மனம் நிறையன்பே
மனமகிழ்வைத் தருவது

வாழ்வின் இன்பத்தில்
வருவதை விரட்டுவது
இடரினை மறந்து
இருக்கச் செய்வது

வாழ்வின் துன்பத்தில்
வராததைத் தேடுவது
நம்மை நாமே
நேசிக்க வருவது.

இளமையில் தேடாமல்
இயல்பாய்க் கிடைப்பது
அன்பை விதைக்க
அறுவடையாகும் நிம்மதி.

முதுமையில் தேடினால்
முட்டி மோதுவது
பிறரிடம் காட்டப்
பிறப்பது மனநிறைவு.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# புதுக்கவிதைகள்

மண்ணில்
விழுந்த விதைக்கு...
கால்கள் முளைத்தன
வேர்களானது.
கரங்கள் முளைத்தன
கிளைகளானது.
பூக்கள் முளைத்தன
புன்னகையானது.

/



அந்த மரக்கிளையில்
பறவை பறந்து போன பிறகும்
அங்கேயே
சிறகடித்துக் கொண்டிருக்கிறது
மனசு.

/

தூக்கம் கலையாத
ஒவ்வொருவரையும்
தேடித் தேடி எழுப்புகிறது
விடியலின் வெளிச்சம்

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# வீழ்வேன் என்று நினைத்தாயோ?


கருவறையில் இருந்து உருப்பெற்று எழுந்தேன்
திருவாய் மலர்ந்து புவியில் விழுந்தேன்
இருள் நீங்கியே ஒளியும் கிடைத்தது
படுக்கையில் இருந்தேன், கவிழ்ந்து கிடந்தேன்
மண்டியிட்டு தவழ்ந்தேன் நடைபயில முயன்றேன்
விழுவதற்காய் அழுபவன் நானென நினைத்தாயோ?
மாலை மலையிடையே மறைந்தாலும் மறுநாளே
காலை முளைக்கும் கதிராய் எழுவேன்
ஒவ்வொரு அனுபவத்தையும் கைகூப்பித் தொழுவேன்
கீழ்நோக்கி விழுந்த விதையே என்றும்
மேல்நோக்கி விருட்சமாய் வளர்ந்து நிற்கிறது
எத்தனை இடர்கள் என்னை வாட்டினாலும்
எக்காலும் நானே தாழ்ந்து வீழேன்
துயரங்களைக் கண்டு அஞ்சியும் வாழேன்
வீழ்வேன் என்று நினைப்பவர் மத்தியில்
மலராய் மணம்பெற்று மகிழ்ச்சியில் திளைப்பேன்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# ஆசைக்கு வேலி

ஆசைப்பட்டது எல்லாம் கிடைக்காத போதும்
மனம் தோல்வி அடையவில்லை ஏனெனில்
பல வலிகளை பார்த்து விட்டேன்
படிப்பு முடிந்ததும் நான் நினைத்தது
ஒன்றும் நடக்க முடியாத சூழல்
வாழ பழகி கொண்டு வாழ்ந்தேன்
திருமணம் முடிந்த பிறகும் படித்தேன்
அப்பா பணத்தில் நான் படிக்க
சிறிது காலத்திற்கு பிறகு ஆசிரியராக
வேலை பார்த்து வந்தேன் மழலையோடு
மழலையாக கவலைகள் எல்லாம் தீர்ந்தன
பிஞ்சு முகத்தில் சிரிப்பு சத்தத்தின்
ஓசையோடு நாட்களும் நகர்ந்து சென்றன
என்னுள் இருந்த எழுத்து என்னை
எழுதத் தூண்டி நானும் கவிஞனாய்
வலம் வர தொடங்கிய பிறகு
புத்தகங்களும் வெளியிடத் தொடங்கினோம்
ஆனால் என்னைப் போன்றவரின் புத்தகம்
பல ஆளுமைகளின் கண்ணில் படாமல்
போனது சிறிதளவு வருத்தம் அளித்தாலும்
நம்பிக்கையில் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம்
எங்களது புத்தகமும் என்றாவது
ஒருநாள் வெளி உலகத்தைப் பார்க்கும் என்ற
நம்பிக்கையோடு பல படைப்பாளிகள்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# பறவையின் புலம்பல்



அன்று
பறவைகள் வாழ்வியலில்
ஒன்றிப் போனதொரு காலம்.
இயற்கையுடன் இணைந்து
இனிய அறப்பணி செய்யும்.

விதைகளை விழுங்கும்
மன்பதை வாழ
மண்ணிலே எச்சங்களை இட்டு
மிச்சமுள்ள காடுகளைக்
காக்கும்.

கூட்டுக்குள்ளே
உறவுகளை வைத்து
கோடி உதாரணமாக வாழும்.

கூடி வாழ்வதெப்படி என்று
நாடிச் சென்று கேட்கலாம்
இவைகளிடம்.
அவ்வளவு அழகு!

ஆனால் இன்றோ
தன்னலப் பித்து தலைக்கேற
மானிடர்கள் மரங்களை
அழிப்பதால்
இருப்பிடங்களை இழந்து ஏதிலிகளாய்
எங்கோ அலைகின்றன

கான்கீரிட் வனத்திற்குள்
கழுத்து நீட்டி
உணவு கேட்கும் அவலம்

அலைக்கற்றைகளால்
அசுர வளர்ச்சி அடைந்தாலும்
நிலைகுலையச் செய்திருக்கிறோம்
அவைகளின் வாழ்வை

என்னிடத்தை அழிக்காதீர்கள்
உங்களிடத்தை வளமாக்குகிறேன்
என்று எங்கோ ஒரு பறவையின்
புலம்பல் காதில்
ஒலித்துக் கொண்டே தான் இருக்கிறது

இவைகளின் இனம் அழியாமல்
காக்க மனம் வைப்போம்

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# செல்பேசி வாங்காதே

விழித்தவுடன் தேடியெடுத்து
விழிமூடினாலும் அருகினிலே
விநாடிபொழுது கைப்பேசி
வினையூக்கியாகவும்
விசையீர்ப்பாகவும்
வித்தியாச கைப்பேசி விதிமுறைகள்.



கரண்ட் இருக்கும்போதே சார்ஜ் போட்டுவிடு
காசு இருக்கும்போதே ரீசார்ஜ் செய்துவிடு
காலத்தில் வரும் சிறப்பு ஆஃபர்களை சரியாக பயன்படுத்து
கிறுக்குத்தனமான மணி பற்றிய மெசேஜ் நம்பாதே
கீழ்த்தரமான வீடியோக்கள் ஏற்றாதே
குறைந்த வெளிச்சத்தில் அதிக நேரம் பயன்படுத்தாதே
கூடா எதிர்பாலின நட்பு கேடாய் முடியும்
கெட்ட வதந்தியை பரப்பாதே
கேடுகெட்ட சூதாட்டத்தில் வாழ்வை இழக்காதே
கொலைவெறியாக எப்போதும் கையில் வைத்து அலையாதே
கோடி புண்ணியம் குடும்ப உறுப்பினர்களுடன்
சில நேரம் செலவிடு.
கௌரவம் என்று வட்டிகடன் வாங்கி செல்பேசி வாங்காதே

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# அடை மழையும் அணையாத விளக்கும்!

என் வாழ்வு என்றும்
இதமான காலநிலை பூமிதான்
திடீரென சூழ்ந்து கொண்ட
கரு மேகங்களின் மோகத்தினால்
இன்று எனது பூமியில்
அடர் மழை தொடர் மழையானது



என் பூமியில் பொழிகின்ற
மழை சற்று வித்தியாசமானது
அதற்கு துரோகம் ஏமாற்றம் பொறாமை
என பல முகங்கள் உண்டு

இவையெல்லாம் என் பசுந்த பூமியை
பந்தாட நினைக்கிறது
என் மூச்சுக்காற்றை
நிறுத்த முயல்கிறது
எனது எழுத்துக்களை
பழி கேட்கிறது
இது எனக்கு மிகவும் வலிக்கிறது

இம்மழை என் பூமியை விட்டு
விலகுமா என்பது எனக்கு தெரியாது
ஆனால் இம்மழை என் பூமியை
விட்டு விலகும் வரை
என் மூச்சு காற்றை இறுக பிடித்து
என் எழுத்துக்களுக்கு உயிர் கொடுத்து கொண்டே
அடை மழையில் அணையாத விளக்காய்
ஒளிர்ந்து கொண்டுதான் இருப்பேன்

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# இயற்கை சிறகு

இன்னும் எத்தனை சிலிர்புகளை
உன்னுள் ஒளித்திருப்பாய்
இயற்கை மகளே!

எத்தனை கண்கொண்டு தேடினாலும் தீராது
எத்தனை செவிக்கொண்டு ருசித்தாலும் அடங்காது



யாரும் காதலிக்க இயலா
இயற்கை பெண்ணே!
உன்னுள் இத்தனை அழகா!
உன்னில் இத்தனை நிறமா!
உன்னிடம் இத்தனை எழிலா!

நீரால் குளிரும் உன் விழிச் சாலம்
நெருப்பால் சிரிக்கும் நின் எழில் கன்னம்
காற்றாய் மிதந்து நீ தரும் முத்தம்

கிட்டிட கிட்டிடாதோ பூவுலக சொர்க்கம்
யாருக்கும் நீ சொந்தமில்லை
யாரும் கொள்ள பொருளுமில்லை

ஆனாலும் உன் எழிலோ சொந்தம் கொள்ள
கொ(சொ) ல்லுதடி

கரம் நீட்டி வரம் தர(வா)
உன்னோடுதான்
நான் இணைய.
உன்னில் தான்
நான் மலர.

ஏனெனில்,

ஏமாற்றமாட்டாய்,
மனமாரமாட்டாய்.
இக்கால மனிதர் போல்
இறுக்கமாய் இருக்க மாட்டாய்.

வா, எழிலே இரண்டற கலக்க.
வாழும் மட்டும் மகிழ்வினில் ருசிக்க

கவிஞர் சரவணன்.மு,மயிலாடுதுறை


# உழைப்பு

வரிசையாய் ஊர்ந்து செல்லும்
எறும்பு சொல்லும் சுறுசுறுப்பின் மேன்மை!
ஓய்வின்றி பறந்து பறந்து
தேன் சேகரிக்கும் தேனீ
நமக்குத் சொல்லும் உழைப்பின்
அவசியம்!
இடையறாது வந்து மோதும்
அலைகள் சொல்லும் சோம்பலில்லாத
உழைப்பின் பெருமை!
அரை சாண் வயிற்றில் தகிக்கும்
அக்னியின் ஜ¬வாலை
நெற்றி வியர்வை நிலத்தில் விழ
உழைக்கச் சொல்லும்!
ஏழை உழைத்துக் கொண்டிருக்க
ஒரு வர்க்கம் சுரண்டி வாழ்கிறது!
உழைப்பவரின் விலையில்லா
உதிரத்தை மதிப்போம்!
உழைப்பவரைக் காப்போம்!
நாட்டை உயர்த்துவோம்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# நிசப்த பயணத்தின் புதையல்



இரவின் சத்தம் உணர்ந்ததுண்டோ!
இருகப்பற்றிய மின்மினி இரண்டும்
இசையாய் ரிங்காரமிட
இலை கிளையோடு தென்றலின்
மீட்டலுக்கு நடனமாட.

பழுத்த இலைகள் வசந்தமாய்
பாதம் தழுவிட
புதைந்த அடிமன ஆழத்தின் தித்திப்பு
பூரிப்பாய் பூமணக்க
புன்னகையிலே

புணரி சூழ்ந்த அடவிதனில்
ஒற்றை நிலவின் சுகம்.
துணையாய் துயில் எழும்ப
தூரிகை கொண்டு வண்ணமிட
பிறையவனும் வானவில்லாய்
தனித்து தன்னகத்தை ஆக்கிரமிக்க.

சுழலும் ஞாலத்தைச் சுற்றியே
அவனோடு(பிறை) நீண்ட நெடும் பயணம்.

பாதம் நோக பற்று விவேகமாய்
பதைக்கும் இருதயத்தின்
உச்சக்கட்ட ஆனந்த கூச்சல்.

பதற்றம் அனாதையாகிட
பரிதவிப்பு பலனற்று நிற்க
அச்சமும் நாணமும் பந்தமற்று தொலைவில்.

பூரிப்பின் கனாவில் அகம் முழுதும்
படபடக்கும் பட்டாம்பூச்சியின் மினுப்பில்
மௌனமாய் நகைப்பு மட்டும் புதையலாய்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# வாழ்க்கைப் பாடம்

(அந்தாதி கவிதை)

வானும் கடலும் சேரும் இடமே
இடமே அங்கே நிஜமாய் இல்லையே
இல்லையே பார்வைத் தோற்றப் பொய்மையே
பொய்மையில் புரண்டே உலகமும் சுழலுதே
சுழலுதே நாளுமே இரவும் பகலுமே
பகலுமே பகருதே பலவித பாடமே
பாடமே தருமே இரவும் சேர்ந்தே
சேர்ந்தே இன்பமும் துன்பமும் வாழ்விலே
வாழ்விலே இரண்டறக் கலந்தே இருக்குதே
இருக்குதே இயற்கையும் உணர்த்துதே உண்மையே
உண்மையே உணராமல் உள்ளமும் மறுகுதே
மறுகுதே அதனால் வாழ்வும் சறுகுதே
சறுகுதே உள்ளமும் இதனால் உருகுதே
உருகுதே மேலும் கவலை பெருகுதே
பெருகுதே எண்ணமும் பக்குவம் தருதே
தருதே மனதில் வரமாய் உரமே
உரமே உதவுமே வாழ்வில் வளமே
வளமே களமாய் வசந்த வனமே
வனமும் பூத்தே தருமே நறுமணமே
நறுமணமே சுகமாய் வீசும் சுகந்தமே
சுகந்தமே சுவாசமாய் மாறும் தினமே
தினமே திருப்பம் பலவும் வருமே
வருமே ஆனால் அகமோ மலர்வே
மலர்வே மழையும் தருமே வானுமே



கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# காதல் தந்த இதயம்

கண்களில் அவள் ஒழிந்து இருக்க
கடிகாரத்தில் நேரம் கடந்து இருக்க
இதயத்தில் அவள் நின்று இருக்க
எனக்காக அவள் பிறந்து இருக்க
அவள் அன்பு பிடித்து இருக்க
ஆசைகள் என்னை சூழ்ந்து இருக்க
அழகான தேவதை வந்து இருக்க
வாசல் திறந்து இருக்க
வாழ்க்கையை நான் ரசித்து இருக்க
இதயம் இடம் மாறி இருக்க
புன்னகை இதழில் பூத்து இருக்க
கனவில் நம் மிதந்து இருக்க
கற்பனை உற்று எடுக்க
வார்த்தைகள் கவிதையாய் மாறி இருக்க
என் மனதில் நீ இருக்க
நிம்மதி தொலைவில் இருக்க
காதல் வலியை நீ தந்து இருக்க
அதுவும் சுகமாய் இருக்க
காலம் எல்லாம் காதல் மலர்ந்து இருக்க



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# என்னவனின் வருகை

காற்றாய் என்னை சிலிர்க்க
வைக்கும் என் குளிர் காற்று
நீயே!
தலைவி இவளோ!
தலைவனுக்கு காத்திருக்க..
இவளின் நினைவில் அவன் வாட
இந்த ஏக்கங்கள்
கலந்ததுதானா காதல்.
புரிதலாய் தொடங்கிய
அன்பு பிரியாமல்
புரிந்த உறவாய்
என்னுள் உன் நினைவுகள்
வாழ வேண்டுமே!



கவிஞர் சர்மிளா பழனிச்சாமி,பெருந்துறை

# சிலப்பதிகாரம் [பதின்மூன்று]

II.காடுகாண் காதை — தொடர்கிறது .
7. வசந்த மாலையின் உருவத்தில் வன தேவதை
மதுரையை நோக்கி அந்தணன் கூறிய பாதையில் செல்கிறார்கள்
மெதுவாக நடந்து வரும் கண்ணகி குடிக்க தண்ணீர் கேட்கிறாள்
அது கேட்ட கோவலன் ஒரு பொய்கையில் நீர் எடுக்கச் செல்கிறான்
புதுமுகமாகஒரு வனதேவதை வசந்தமாலை உருவில் நிற்கிறாள்

அவள் கோவலன் பாதங்களில் வணங்கி மாதவி பற்றி கூறுகிறாள்
"பவழமேனி மாதவி தனித்து உனக்காக இன்னமும் காத்திருக்கிறாள்
கவனமாக எழுதிய மடலில் தீது ஒன்றும் இல்லை நான் அறிவேன்
தவசியாக தனித்து வாழ்ந்து வருகிறாள் என்னோடு வாருங்கள்"

வசந்தமாலை சொன்னதைக் கேட்டு கோவலன் நம்பவில்லை
கசந்துபோனதைப் பேசும் இவள் அவளாக இருக்க வாய்ப்பில்லை
பசப்பாக பேசியவளுக்கு வஞ்சம் பெயர்க்கும் மந்திரம் ஓதினான்
வசமாக மாட்டிக்கொண்டவள் மன்னிப்பு கோரி விலகினாள்.



8. ஐயைக் கோட்டத்தில் தங்குதல் :
துன்பம் தரும் பாதையைக் கடந்து பூஞ்சோலையில் தங்கினாரகள்
அன்பும் அருளும தரும் கொற்றவை கோயில் ஒன்று அங்கு இருந்தது
இன்பமான எதிர்காலம் நன்மையே பயக்கும் நம்பிக்கை உண்டாக
முன்வரும் கவுந்தியடிகளுடன் அங்கு இருவரும் தங்கினார்கள்

12. வேட்டுவ வரி : 1. வேடுவர்கள் :
ஆங்கு வேடுவகுல வீரர்கள் திரண்டு கொற்றவை வழிபட வந்தார்கள்
தீங்கு ஏதும் நேராமல் தங்கள் குலம் செழித்து வாழ வேண்டி நிற்க
ஏங்கும் அவர்கள் முன் வேடுவப் பெண் சாலினி மீது தெய்வம் வந்தாட
பாங்கான கொற்றவைக்கு நேர்த்திக்கடன் செலுத்தவேண்டும் என்றது.

2. வேடுவர்கள் நேர்த்திக் கடன் :
தம் குல குமரிப்பெண் ஒருத்தியை கொற்றவை அலங்காரம் செய்தனர்
வம்படியாக புலிப்பல்லை கோத்த மாலை தாலியாக கழுத்தில் கட்டினர்
கம்புமாவு, எள்ளுருண்டை, ஊண் உணவு, சந்தனம் வைத்து படைத்தனர்
விம்மும் வாத்தியங்கள் முழங்க கொற்றவையை தொழுது வணங்கினர்

3. கொற்றவை அருள் வந்து சாலினி கூறியது :
சாலினி மீது கொற்றவை இரங்கி கண்ணகியை புகழ்ந்து கூறினாள்
மாலினியான கண்ணகி கொங்கு நாட்டின் காவல் தெய்வமாவாள் (துர்க்கை)
தாலியின் மகிமைக்கு பெண்களின் தவப்பயனால் தோன்றியவள்
வேலியான கணவன் முதுகில் மறைந்து தலை குனிந்தாள் கண்ணகி .

4, 5. கொற்றவையின் சிறப்பு :
நெற்றிக் கண்ணுடைய சிவனின் உமாதேவியே கொற்றவை ஆவாள்
உற்ற துணையாக வேடர் குலம் காக்க வந்தவள் கொற்றவை ஆவாள்
சுற்றம் சூழ்ந்த வில்லேந்திய மறவர் குல தெய்வம் கொற்றவை ஆவாள்
சற்றும் அயராது வேடுவரைக் காப்பாற்ற வந்தவள் கொற்றவை ஆவாள்

6. மறவர்களின் வீரத்தை சாற்றுதல்:
பகைப்புலனை வெற்றி கொண்டு கவர்ந்த பசுக்களை தானம் தருவார்கள்
தகைமையான் ஒற்றர்கள் வேல் வாள் படை வீரர்களாகவும் விளங்கினர்
மிகையான வீரர்கள் தன் இரத்தத்தை காணிக்கையாக தருவார்கள்
சுவையாக நிமித்தம் கூறும் பறவை சோதிடர்களும் இருந்தனர்

...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# மறக்க முடியா பொழுதுகள்!

நிறம் மாறிய
காலைப்பொழுது!
திசை எங்கும்
வானூர்தி புகை!

தெறோச்சி உமிழ்ந்த
குண்டு உருக்குலைந்த
வணிக வளாகம்!

குண்டு துளைத்த
குடில்கள் குவிந்து இருக்கும்
உடல்கள்!

தெருவெங்கும் ஓலம்
சிதைந்த வீடு
செல் அரித்துபோன
வாசல்!

குப்பை அள்ளும்
ஊர்தி உடல்கள்
அள்ளிச் செல்லும்
அவலம்!

மறக்கவும்
மறைக்கவும்
முடியாத பொழுதுகள்!



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# வீழ்வேன் என்று நினைத்தாயோ

சுனாமியாக துரத்தியது தினம் துன்பம்
சுழற்றி அடித்தது துரோக எண்ணங்கள்
சுற்றி வஞ்சகத்தால் வலை வீசினர்
சுற்று பட்டு விழ ஏங்கினர்.

பொறாமையின் உச்சத்தால் நச்சு வார்த்தைகள்
பொல்லாத எண்ணத்தால் பல சூழ்ச்சிகள்
பொறுமையை சோதித்து தூண்டுதல் செய்கைகள்
பொறுக்காமல் ஆவேசப்படும் என்ற எண்ணத்தாலே.

போட்ட திட்டத்தை சதி செய்தே
போட்டி இட்டு தடுத்து நிறுத்தியே
போகட்டும் எங்கோ என்று நினைத்தனரோ
போர்த்தி கிடக்கட்டும் என்று ஆசையோ.




வினை செய்ய வீம்புகள் செய்தே
விளையாடினர் வாழ்க்கை நேர் கோட்டிலே
விடை அறியா பாதை ஆக்கியே
விடை தேடி அழைய விட்டார்களே.

மனதை கிழித்து வலிமையாக ஆக்கி
மனதோடு தினம் தினம் போரிட்டு
மல்யுத்தம் செய்து ஏறிட செய்து
மதம் பிடித்த யானையாக வென்றேனோ

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# நட்பு

சொந்தங்கள் என்பது
பனித்துளி போன்றது
சிறு பொழுது மறைந்து விடும்.
நட்பு என்பது
பரந்த வானம்
போன்றது.
உன்னை சுற்றி எப்போதும்
நிலைத்து நிற்கும்



கவிஞர் ஸ்ரீ வள்ளி,கோவை

# கண்ணாடியுமா

பிம்பத்தைக் காட்டும்
கண்ணாடி ஆனது - மாறாக
அவளின் பேரழகைப் பார்த்து
கண் அடிக்கிறதே.



கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# போதை

மனுக்குலம் நாட்டம் கொண்டது
போதைக்குள் தன்னை பூட்டிக் கொண்டது.
மனவலி தீர்க்க போதைக்கு பலியாகிறான்
மீள வழி இன்றி மாயமாகிறான்.



தேனிக்கும் உண்டு மது மயக்கம்
அதை மதிமயக்குவதில்லை பூத்தேன்.
மனிதனுக்கு உண்டு மது மயக்கம்
அவனை தெழிய விடுவதில்லை ஆல்கஹால்.

டோப்பமின் அணுக்கள் புத்துணர்ச்சி பெற
புகை குடிக்கிறான் பின் புத்தி பேதலிச்சி
புதைகுழிக்குள் செல்கிறான்.
மது நாட்டிற்கு வருமானம்
வறுமை வீட்டிற்கு வருமானம்.

குடி மக்களை உருவாக்கி
குடும்பத்தை கெடுத்து கோதையை கெடுக்கிறது.
விளையாட்டாய் தொட்டவனும்
வினை வாங்கிக் கொண்டான்.

என்விதியென்று மதிகெட்டு நின்றான்
வாழ்க்கையில் மனம்கெட்டு நின்றான்.
காயத்தினுள் காயம் வந்து கல்லறைக்கு செல்கிறான்
செல்லும் வழியில் கூட கள்ளுக் குடித்தே ஆடுறான்.

வயது பால் இல்லை பருகுவதற்கு பலரும்
வந்து சேர்ந்தனர் போதையின் மகிழ்விடத்திற்கு.
போதையின் பசிக்கு மாதுக்கள் மதுக்கிண்ணம்
மாரனின் வேட்டையில் மங்கையர் சடலம்.

போதையில் சிக்குண்டவர் பேதையாக போயினர்
தப்பிப்பிழைத்தவர் மேதையாக போயினர்.
தொட்டவன் கெட்டுப்போனான் விட்டவன்
ஞானம் பெற்றுக் கொண்டான்.

கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# புன்னகை மொழி

புரிதலில் மலர்ந்திட்ட
அற்புத உறவுகளும்
ஜென்மங்கள் தோறும்
தொடரும் பந்தமாய்
எப்போதும் என்றென்றும்
நீடித்து நிலைத்திருக்க
தேவைப்படுவதிங்கே
ஆயிரம்
அர்த்தம் சொல்லிடும்
இதமானதொரு
மௌனப் புன்னகையே!
இதழ் விரித்திடாமல்
கண்களால் மட்டுமே
பேசப்படும்
புன்னகை என்னும்
அழகானதொரு மொழியே
இங்கு யாவருக்கும்
மிகவும் எளிதாக
எந்த அகராதிகளும்
சொல்லிடாத முப்பத்து
முக்கோடி அர்த்தங்களையும்
சொல்லிடுமே!



கவிஞர் மலர் அபி

# ஹைக்கூ

கரைபுரண்டோடும் ஆறு
வெகுதூரம் சென்று மறைகிறது
பசியோடு பறவை ...!

***

காலை 7 மணியிலிருந்து கூழ் விற்கும் வியாபாரி
காலை 10 மணிக்கே தன் வியாபாரத்தை முடித்துவிடுவார்
தள்ளுவண்டியில் வெகுச் சிறப்பாக
புன்னகையுடன்
ஓடிக்கொண்டிருக்கிறது
''புன்னகை என்ன விலை'' என்ற பாடல்.



கவிஞர் ச.இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்



அகர முதல

# ஆசி

ஆடியசைந்து
மெதுவாக நடந்து
பச்சை நிழல்களால் அனைத்தையுமே
தன் வசமிழுத்து
வீசும் காற்றில் மெல்ல அசைந்திடும் மரத்தடி நிழலில்
எல்லோரும்
வியக்கும் வண்ணம்
கம்பீரமாய் போய் நிற்கும்
பெரும் சரீரத்தின் முன்
தொடர் தியானத்திலிருந்த புத்தனும்
அவசர அவசரமாய்
சர்ச்சைக்குள்ளான
பத்து ரூபாய் நாணயத்தை
உள்ளங்கையில் வைத்து
வரிசையில் நிற்கிறான்
பாகனின் உத்தரவின் பேரில்
ஆசிர்வதிக்கும் காவேரியிடம்
தானும் ஒருமுறை ஆசிபெற.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# கடந்து செல்வோம்

எந்த வலியும்
எந்த உறவும்
எந்த சூழலும்
எந்த இறுக்கமும்
சுலபமானது தான்
புன்னகையுடன்
கடந்து செல்ல
பழகிக்கொண்டால்.



கவிஞர் பேரா.கீர்த்தனா.பு,திருப்பூர் மாவட்டம்

# ஆள்வினை உடைமை

(அதிகாரம் : 62)

அசராமல் காரியம்முடிக்க
ஆயத்தம் செய்திடல்.
அதைச்செய்யத்தக்க பேற்றினை
அயராமை உண்டாக்கும்.

செயல்முடியாமல் இடைவிடுவோரை
உலகம் கைவிடும்.
முயற்றின்மை கைவிடலே
வெற்றிக்கு வித்தாகும்.




பிறர்க்குதவல் பேருவகை
ஈடில்லா மேநிலைமை.
விடாமுயற்சி இதைச்சொல்லும்
கொடைப்பண்பது வெல்லும்.

போர்க்கஞ்சும் பேடியின்கைவாள்
பேராண்மை கொள்ளாதுபோல்.
முயற்சியில்லா பேர்களும்
பேடித்தன்மை கொண்டோரே.

தன்னுவகை விரும்பாது
தானேற்ற செயல்முடிப்போன்.
முன்னிற்போரின் பிணிநீக்கி
தாங்கும் தூணாவான்.

அயராமுயற்சி ஒருவனுக்கு
அளப்பரிய செல்வமீயும்.
அயர்ந்த முயலாமை
அளவிலா வறுமைதரும்.

கரிநிறைந்த மூதேவி
சோர்ந்தோன் உடலிலும்.
அருள்நிறைந்தத் திருமகள்
முயல்வோனிலும் வாழ்கிறாள்.

ஊழ்வினையால் நன்மையற்றிருத்தல்
ஒருவர்க்கு பெரும்பழியன்று.
முயற்றின்மைதரும் அறியாமையே
பெரும்பழியாய்க் கொள்ளப்படும்.

இறையால் செய்யவியலா
காரியம் என்றாயினும்
உடல்வருத்தும் முயற்சியின்
கூலியாய் வெற்றிகிட்டும்.

அசராத தொடர்முயற்சி
செயல்முடிக்க இடைஞ்சலாகும்.
விதியறுத்து ஒருநாளதை
தோல்விகொண்டு ஓடச்செய்யும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# பள்ளி நினைவுகள்

நீங்கா நினைவு
அட்டை போட தெரியாமல்.
நண்பனிடம் கொஞ்சிய நாட்கள்
ஒரு நாள் வரும் பிறந்த நாளுக்காக
364 நாட்கள் ஏங்கிய தருணம்.
பள்ளி மணி அடித்தவுடன்
மதிய உணவை தூக்கிக்கொண்டு
ஓடிய ஓட்டம்.
கணக்கு வாத்தியாரிடம்
நன்றி வாங்கியா நோட்டை பாதுகாத்த தருணம்.
தேசிய கீதம் பாடும் போது
ஆசையாமல் நின்ற தருணம் .
மனப்பாட செய்யுளே .
போட்டி போட்டு மனப்பாடம்
செய்த நாட்கள் .
இன்று ஆதற்கு ஏங்கி தவிக்கும் மனம்.



கவிஞர் மணிமாறன்,மயிலாடுதுறை மாவட்டம்

# மௌனம்

காதுகள் விரும்பியோ
விரம்பாமலோ
ஓய்வெடுத்துக் கொள்ள
இதயம் மட்டும் செவிமடுக்கும்



புரிந்து கொள்ள முடியாத
அபூர்வ மொழி.
வார்த்தைகளின் ஆழமும்
உணர்வுகளின் நீளமும்
கண்களில் மட்டும் புரியும்.

சிலவேளைகளில்
சம்மதத்தின் அறிகுறியாகும்
மொழிகளில் இனியமொழியாய்
உணர்வுகளோடு உறவாடும்

அன்றேல் அசையாத நாவுக்குள்
ஆயிரம் யுத்தங்களாக
நிசப்தமாய் நின்று தாக்கும்
அவ்வப்போது
மரணவலிகளாய் நீளும்.

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்

பசிக்காய் அழுதே அம்மாவின்
வருகைக்காய் காத்திருந்தே
தவழ்ந்த போது எப்போது
நடப்போம் எனக்கரம் பிடித்து.

கல்விச்சாலையில் கவின்மிகு
இளமையில் கல்வியின்
புரிதலுக்கு தவித்து விரக்தியில்
வீட்டுப்பாடம் எழுதாமல்.

கல்லூரிக்காலங்களில் அரும்பு
மீசைக்காய் ஏங்கி
கடைக்கண் பார்வைக்காய்
தவமிருந்து தவித்து.

வேலை கிடைக்கவில்லையென
தண்டச்சோறு பட்டம் பெற்று.
தவிப்பாய் தலைபோகிற கனவுகளோடு
நேர்ப்பட பல கேள்விகளுக்கு
பதில் தேடி.. பரிதவித்து.

திருமண வாழ்வில் திகிலான
திருப்பங்கள் மிகுந்த.
தேவதையோடு குடித்தனம்
தேடி வாழ்ப்புகுந்த காலங்களில்

தனி வீடு வாங்க வங்கிகளுக்கு
அலைந்து.. அதற்கு மாதத்
தவணை கட்ட விழி பிதுங்கி
தவறவிட்டவைகளைத்தேடி.



வாரிசுகளைப் பட்டம் வாங்கிட
வாய்வழியாய் வழிந்த
நுரை தள்ளும் குதிரையாய்
பயணம் பயமாய் தொடர.

நரை விழுந்து நாடி நரம்பெல்லாம்
தளர்ந்து போக.. நாளைகளைத்
தேடி தேடி கட்டையிலே போகுமுன்
மோட்சம் தேடி.

என்றெம தின்னல்கள்
தீர்ந்துபொய் யாகும்
என்றேனும் சுகத்தேடல்களின்
வாழ்வின் நவரசம்
எப்படி என இரசித்து
உணர்ந்திட.
என்றெம தின்னல்கள்
தீர்ந்துபொய் யாகும்

**கவிஞர் இரஜகை நிலவன், மும்பாய்**

# ஆனந்தமாய் நனைக்கிறேன்

மழையினில் நனைந்திட அழைத்தேன்
வர மறுத்து ஒரு கடையின் தாழ்வாரமிட்ட வாசலில்
ஓடிப் போய் நின்று கொண்டாய்.
என்னையும் அழைத்தாய் ஒவ்வொரு சொட்டாய்
விழும் நீரை கையில் ஏந்தி ரசித்திட எனக்கு
துளியும் விருப்பமில்லை.
இந்த மழை நாளை வருமா என்று தெரியாது
ஆதலால்,
இன்றே நனைந்துவிட்டு போகின்றேன்.



கவிஞர் ரமேஷ்யோகி & கு.ரமேஷ்குமார்,மதுரை

# ஆசான்களே

வலி செதுக்கி வழி செய்த உளிகளே
இரவுகள் விளக்கணைத்த பாதைகளே
பகல்கள் பார்த்துத் தோண்டிய பள்ளங்களே
வல்லினங்கள் உயிர் கொய்யும் வார்த்தைகளே
தூரிகைகள் மாற்றி வரைந்த பிம்பங்களே
நிமிர்வதற்கு வாய்ப்பளித்த விழுதல்களே

உதிர்ந்தாலும் புன்னகைக்கும் மலர்களே
பிரிந்தாலும் மேகம் தாண்டும் துளிகளே
வளைந்தாலும் ஆழி செல்லும் நதிகளே
பறந்தாலும் தடம் மாறா சிறகுகளே
உயர்ந்தாலும் பணிவு கொள்ளும் மலைகளே
பாதை செப்பனிட்ட ஆசான்களே

அன்பின் கர்வத்தோடும்
துணிவின் அடக்கத்தோடும்
நன்றிகள் நவில்கிறேன்




கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# உலக சிறுசேமிப்பு தினம் [அக்டோபர் 13]

இல்லானை இல்லாளும் வேண்டாள்! ஈன்றெடுத்த
தாயும் வேண்டாள்! செல்லாது அவன்
பேச்சென்று சொல்லி வைத்தாள் ஔவையவள்!
பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லையென்றார் வள்ளுவரும்!
வருங்காலத் தேவைக்கு சேமிப்பே பெருந்துணையாம்!
எதிர்பாரா செலவினங்களை சிரமமின்றி எதிர்கொள்ள
உதவிடும் சேமிப்பு! சிறுதுளியே பெருவெள்ளம்!
வருவாய்க்குள் செலவமைந்தால் வாழ்வில் துன்பமிலை!
வருவாயில் ஒருபகுதி சேமிப்பாய் சேர்த்துவைத்தால்
வருங்காலத் தேவைக்கு பெருந்துணையாய் அமைந்திடுமே!
மாரிக்காலத் தேவைக்காய் உணவை சேமிக்கும்
சிற்றெறும்பிடம் நாம் சேமிப்பை கற்றிடலாம்!
சிறுவயதில் பிள்ளைகளுக்கு சேமிக்கக் கற்பித்தால்
சிக்கனத்தை அறிந்திடுவர்! சேமிப்பால் பயனடைவர்!
சேமிப்பின் அவசியத்தைப் பள்ளிக் கல்விதனில்
பாடமாய் வைப்பதுடன், எல்லா மாணவர்க்கும்
கணக்கொன்றைத் துவக்கிடலாம்! சேமிப்போர் தமக்கு
ஊக்கப் பரிசுகளை வழங்குதல் பயனளிக்கும்!
அவசியம், ஆடம்பரம் எவையென்று உணர்ந்தாலே
தவிர்த்திடுவர் வாழ்வினில் தேவையில்லாச் செலவினத்தை!
செலவினங்கள் போக மீதியை சேமிக்காமல்
சேமிப்பு போக மீதியை செலவழிப்போம்!
பெருந்தொற்றுக் காலத்தில் வருமானம் இல்லாமல்
பெருந்துயர் அடைந்தோமே! காலத்தின் படிப்பினையாய்
சேமிப்பின் அவசியத்தை உணர்ந்தோமே அத்தருணத்தில்!
சிக்கனம் வீட்டைக் காக்கும்! சேமிப்பு நாட்டைக்காக்கும்!
இக்கணமே சிந்திப்போம்! சேமிக்கத் துவங்கிடுவோம்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# எல்லாம் மாயை

அகண்ட பிரபஞ்சத்தில் ஆக்கம் இல்லா மனித குலத்தில்
நாம் பார்ப்பதும் அர்ப்பணிப்பதும்
ஆட்கொள்வதும் எல்லாம் மாயை
நிரந்தரம் எல்லா நிபந்தனையில் பூமியும் உயிர்களும்
உருவமில்லாமலே பின் நாட்களில்

தான் தனக்கு எதுவும் இல்லை அனைத்தும்
அனைத்து உயிர்க்கும் இருக்கும் வரை
என்றபோதனையே மாயை.

மாற்றம் ஓர் மாயத் தொடரே வாழ்நாள் முழுவதும்
ஒவ்வொருவர் வாழ்க்கையிலும்
தண்டித்தாலும் தண்டிக்கபடாவிட்டாலும்
இங்கு காட்சிகள் மட்டுமே நிகழ்காலத்தில்
எதிர்காலத்திற்கு ஏடு இல்லாமல் பலரும்
பாகுபட்ட மனநிலையில் கருணை இன்றி.



நீ இல்லை என்ற உள்ளம்
என்றோ ஒருநாள் அறிவீர்
அவ்வன்னம் உன் நிலை
உடல் திடல் யார் யாருக்கு
பாகுபட்ட தீண்டாமையில்
தூக்கி எறிவர் எதிர்காலத்தில்
உன்னால் அறிய முடியுமா.
பேருண்டு புகழுண்டு பணம் உண்டு மனம் இல்லை
மனமுண்டு குணமுண்டு அறிவுக்கு நீதிக்கு இடமில்லை
கரம் உண்டு காலமுண்டு உதவிட நிலை இல்லை
உறவுண்டு ஊர் உண்டு பெயர் சொல்ல உன் உயிர் இல்லை
மரபு மற்ற மாண்டோர் மனித மன இறைத்தின்றோர்.
எல்லாம் மாயை,
சற்று பூமியில் நாம் பிறந்து பார்த்து செல்லும்..ஒப்பனை.

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# இரா.மதிராஜ் கவிதைகள்

செடி வைக்கப்பட்டு
நீர் ஊற்றிய உடனே விருந்துக்கு அழைப்பு
பறவைகள் வருகை
*

அவள் அப்படியொன்றும்
பேரழகியல்ல,
அவன் ஏறிட்டுப்
பார்க்காதவரை.

*

கவிதைப் பொங்கல்

வெறும் நீர் சிறிது நேரத்தில் ஆனது
தித்திக்கும் பாயாசமாய்
நிலவின் மடியில் அமரும் போது

*

உடனே கைது செய்யுங்கள்

கைம்பெண் வீட்டெதிரில்
பொட்டு வைத்த சுமங்கலியாய்
நிலவுடன் வானம்



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# ஜன்னலோர காற்று

ஜன்னலோரக் காற்றோடு
கதை பேசிய பொழுதில்
கோவில் மாடப்புறாக்களின்
சடசட சத்தத்தில்
சற்றே விழியசைந்து விரவியது
காலத்தின் மாற்றத்தில்
புருவங்கள் ஏறியும் இறங்கியும் யோசிப்பிலே
அதிசயமும் விலகலும் கலந்த
ஓர் உணர்விலே

மசாலாவின் மணம் நாசியோடு உறவாடியது
பெண்ணவளின் பார்வை
கடிகார முட்களின் ஓட்டத்தில்
புன்னகையோடு சற்று பதட்டமும் சேர்ந்திட
தன் சமையலைறையின்
வாசலை நோக்கிய நடையில்
வழிமறித்த காற்று வழக்கில்
தலை கலைத்து தர்ணாவில்
படபடத்த காலண்டரில்
தேசாபிதாவின் முகமும் மூக்கு கண்ணாடியும்
உயர்ந்த மனிதருக்கான நாள் இதுவென



ஓர் மந்தகாசப் புன்னகையில்
மனம் சிறகை விரித்தது
வானொலியின் கசிந்த
ஊருசனம் தூங்கிருச்சு
ஊதக்காத்தும் அடிச்சிருச்சு
உறவாடும் பாடலும்
உள்ளம் இனிக்கையில்

விடுமுறையும் உறவுகளின்
வருகையில் அங்கே ஓர்
பாசப்பிணைப்பு தான்
பிரிவும் சந்திப்பும் இணைந்த கோடுகளாய்
வளைந்து நெளிந்த காற்றோ கவிபுனைய
இடம் பொருள் ஏவலின்றி
கட்டு காவலன்றி மாயத்தில் மயக்குது

வளைவும் நெளிவும் வாழ்வின்
போக்கில் பழகிடும் பாதையாகி
பழுதில்லாத வரை
பயமின்றி போகலாம்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# இன்மை பூசு

கொண்டாடப்படுதலை விட
சகித்துக் கொள்தல் அழகானது
கண்ணீரை விட
சிறுபுன்னகை ஆழமானது
எதிர்வாதங்களை விட
அமைதியே பவித்திரமானது
எதிர்வினைகளை விட
மௌனப்பரிசுகள் அற்புதமானவை
தடைக(ளை)ளில்
தள்ளியே நிற்பது தெளிவானது
தடங்கல்களில்
முடங்கிப் போகாமலிருப்பது
உத்தமமானது
வெறுமையில் பொறுமை கொள்வது பேராழம்
ஒன்றுமில்லாத போதும்
அகஅழகில் நிறைவாதல் பேரழகு
ஆழ்மனது இன்னல்களால் நிறைந்தாலும் அமைதியே
காத்திரமானது.
முட்களின் கூரில் தங்கிய
சிறுபனித்துளிகள்
கவலை சுமப்பதில்லை.
ஆதலால்,
இனி மை பூசு
இனிமை பூசு
வாழ்வின் வழி(லி)கள்
பேரழகாகும்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# குன்றென நிமிர்

மனிதநேயம் வளர்த்து
மனிதனாய் வாழ்ந்திட
புனிதம் கொண்டு
புத்துயிர் பெற்றிட

அநீதி உடைத்து
நீதி வென்றிட
உண்மை எப்போதும்
உலகில் நிலைத்திட

கல்விக் கடலாய்
கலையோடு வளர்த்திட
நல் லொழுக்கம்
நடைமுறை கொண்டிட

தோல்விகள் வந்தாலும்
சோராது துணிந்திட
வாழ்கைப் போராட்டத்தில்
வாழ்ந்து காட்டிட



முயற்சி ஒன்றே
முன்னேற்றம் அளிக்கும்
அயற்சி இல்லாது
அனைத்தையும் கொள்

வேசம் போடுபவர்களை
வெளிச்சத்தில் காட்டிட
நாசம் செய்யும்
நயவஞ்சகரைக் கொளுத்திட

அடங்காத சிங்கங்களை
அடக்கி ஆண்டிட
முடங்காமல் வேங்கையே
முந்திப் பாய்ந்திடு

இறப்பதற்கு முன்
இன்றே தடம்பதி
பிறப்பும் ஒருநாள்
நம்பெயர் சொல்லட்டும்

கவிஞர் கிருஷ் அபி

# முகக்கவசம்

புரியாது போனதை
அறியாமலே போவதும்
அறிந்து போனதை
புரியாது போவதுமே
உருளும் உலகில்
உறையாத நிகழ்வு

பேராசை என்பதா
பெருஞ் சாபம் என்பதா
புரிந்து கொள்ளுமென
மருகும் மனதை

வெற்றுக் காற்றில்
உலாவிடும் கூடு
வெந்ததை தின்று
வெந்து நீறு ஆகும்வரை




புரிந்து கொள்ளவே
தன்னில் துஞ்சிய மனம்
கெஞ்சித் தானே தொலையும்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# தீண்டும் விரல் தீஞ்சுவை

எத்தனை எத்தனை
அழகியல் கொட்டிக்
கிடக்கிறது அவள் விரலில்

தீண்டும் விரலில்
தீஞ்சுவை நாட்டியம்
மனணம் செய்த வரிகள்
மயங்கியே நிற்கும்

எங்கும் மரம்
அதில்
எங்கு பார்த்தாலும்
பூக்களாய் நாங்கள்

மெல்ல சுவைத்த இதழ்
மெலிதாய் சுவாசித்த நாசி
கண்கள் மூடி நான்
எழுதிய கவிதை நீ
அடர்வனத்து
குயிலானோம்

காதல் வாகனம்
காற்றில் எங்கள் வாசம்
காதலில் மழைத்துளி

தூறல் மழையில்
துள்ளிக் குதித்தது
எங்கள் காதல்



காற்றும் தொடாத
அங்கமெல்லாம்
அள்ளி வீசியது
தன் தூறல் துளிகளை

மழையில் நனைந்தோம்
மனதால் மிதந்தோம்
சாலையெங்கும்
காதலர்களுக்கு
அழகிய வரவேற்பு

காதோரம்
இதழ் பதித்தாள்
அப்பப்பா
என் உயிரில்
பூத்தது காதல் பூ

அவளுடன் நான்

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்

# உறவுகள்

வெட்டி எறியப்பட்ட சொந்தம்
உயர்ந்த மரமாய் நின்றிருக்கும் பந்தம்
இரண்டு வே(பே)ர்கள் சேர்ந்து பயணித்தால்
துளிர்விடும் ரத்த சம்பந்தம்.



கவிஞர் குணசுந்தரி சிவா காஞ்சிபுரம்

# மகளதிகாரம்

வார்த்தைகளில் கொஞ்சி
பாவங்களில் கெஞ்சி
குழந்தையாய் மாறி
சர்க்கஸ் காட்டியும்
கண் அசைவிலும் சலனம் காட்டாது
கம்பீரமாய் வீற்றிருக்கிறாள்
அம்மாவின் மடியெனும்
சிம்மாசனத்தில் மகள்.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# பெண்



குலவிளக்கு !
தாய்மையின் மறுபெயர்
அணையா விளக்கு!
ஆற்றல் மின்சாரம்
இடிக்கும் மின்னல்
ஈரமான நெஞ்சம் நீ
உறங்கா தீ நீ
ஊரெங்கும் போற்றும் உன் உள்ளம்
எதற்கும் அஞ்சா தேவதை
ஏங்கும் உள்ளத்திற்கு ஆதரவு நீ
ஐயமில்லை நீ நடமாடும் தெய்வம்
ஒற்றுமையை வலியுணர்த்துபவள்
ஓய்வின்பதே இல்லை உனக்கு
ஔவையார் - அனைத்தும் தெரிந்த ஔவை நீ
இறைவனும் போற்றும் ஔவை நீ

கவிஞர் முனைவர் சி.சுகந்திர வனிதா,உச்சிப்புளி

# என் மகள்



அருமை மகளே ஆசை மகளே எனதன்பு மகளே
அருகில் வா என் அழகு மலரே

மலடி எனும் துயர் துடைத்திட
வந்திட்ட வசந்தமும் நீயே

இல்லத்தினுள் இனிமையது சேர்த்திட
வந்திட்ட இன்பமும் நீதானே

பெண் பிள்ளை எனது சொத்தென்று பெருமைபடும்
வேளைதனில் பேராதரவாய் நின்றிடுவாயே

சின்னஞ்சிறு கதைகள் பேசி சிங்காரமாய் சிரித்திடுவாய்
சீவி சிங்காரித்து பள்ளிதனில் கற்று முடித்தவுடன்
காத்திருக்கும் அன்னையிடம் அருகில் வா அழகு மலரே

சுரப்பிகளின் மாற்றத்திலே உடலில் பல மாற்றங்களின் அச்சத்தை
கைவிட்டு தோழமையாய் அருகில் வந்திடு நீயுமே

மணமுடித்து புகுந்த வீடு சென்றிடும் புதுமைப் பெண்ணே
புக்ககத்திற்கு புகுமுன்னே அருகில் வந்திடுவாயே

அன்பு மகளே நான் அடக்கமாகும் வேளைதனிலே
ஓரிரு சொட்டுகள் உனது விழிநீரை எனக்கு அர்ப்பணித்திடும்
பேறுதனை பெற்றிட அருகில் வா அழகு மலரே

அன்பு மகளே அருமை மகளே ஆசை மகளே
அருகிலே வா அழகு மலரே

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# மாலவனும் வைணவமும் [பகுதி 5]

திருமால்மேல் நாலாயிரத் திவ்வியமாம் பிரபந்தம்
ஆழ்வார்கள் அருளிச்செயல் ஆக்கினரே! முதலாழ்வார்
கள்மூவர் பொய்கையார் பூதமொடு பேயெனவே
மற்றொன்பது திருமழிசை நம்மாழ்வார் மதுரகவி
குலசேகர் பெரியாழ்வார் ஆண்டாளும் தொண்டரடிப்
பொடியோடு பாணாழ்வார் திருமங்கை என்றமைவர்
பிரபந்தம் தொகுத்தளித்தார் நாதமுனிப் பெம்மானே!
வாழ்ந்திட்ட நூற்றாண்டு முதல்மூவர் பொய்கையொடு
பூதம்பேய் ஆறாகும் என்றிடுவர்! பாணரொடு
திருமழிசை தொண்டரடிப் பொடியாரும் ஏழென்பர்!
குலசேகர் பெரியாழ்வார் ஆண்டாளும் திருமங்கை
எட்டேதான்! நம்மாழ்வார் மதுரகவி ஒன்பதாகும்!
திவ்யதேசம் நூற்றெட்டில் நூற்றைந்து இந்தியத்தே
ஒன்றுமட்டும் நேபாளம் சோழத்தே நாற்பதும்
நடுநாடு இரண்டாகும் தொண்டையில் இருபத்து
இரண்டோடு வடநாட்டில் பதினொன்றும் மலைநாட்டில்
பதின்மூன்று பாண்டியத்தே பதினெட்டும் வானுலகில்
இரண்டாக அமைந்தனவே! திருத்தலங்கள் தமிழ்நாட்டில்
எண்பத்து நான்காகும்! கேரளாவில் பதினொன்று
ஆந்திரத்தே இரண்டாகும்! உத்திரப்பிர தேசத்தே
நான்கோடு உத்ரகாண்டில் மூன்றோடு குஜராத்தில்
ஒன்றோடு நேபாளம் ஒன்றமைய வானுலகில்
இரண்டாமே! பொய்கையார் தோன்றியதோ காஞ்சிபுர
திருவெஃகா பொய்கைதனில்! நூற்றாண்டு ஏழதனின்
ஐப்பசியின் ஒன்றான திருவோணமே! பூதத்தார்
ஐப்பசியின் அவிட்டமாகும் கதாயுதமாம் கவ்மோதக
அம்சமாவார்! இல்லறத்தை நேர்துறந்த பக்தராவார்!
பேயாழ்வார் திருமயிலை ஆதிகேசவர் செவ்வல்லி
மலர்தோற்றம்! மாலவனின் வாளான நந்தகத்தின்
அம்சமவர்! ஐப்பசியின் சதயத்தில் தோன்றிட்டார்!
மாலவன்மேல் பக்தியொடு வைணவத்தின் பற்றுந்த
மடைதிறந்த வெள்ளமெனப் பாய்கிறதே! விடாய்தீர்க!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# அம்பல மாடத்தில் பார்வை

கருநீல வானில் நிலவின் மறைவில்
அந்தி உதிக்க.

ஏதோ ஆகாயத்தில் ஏற்படும்
விந்தை போல பார்வையில்.

நங்கை நனைந்து நீராடி
பொருத்தமாய் பூவாடை உடுத்தி.

பாதச்சுவடை அவனியில் பதிக்க
மோட்சம் செய்த பூவுலகும்
பூத்து குலுங்கினவாம்
பூஞ்சோலையாக.



பொன் பாதத்தின் முதல் அடியை
அம்பலத்தில் படியில் பதிக்க
தளியின் மணிகள் ஒலித்தே
பூங்காற்றும் அவள் தேகம் உரசி சிலிர்க்க.

நீண்ட விழி கேசம் அழகில்
அவளை பிறையாய் சுகிக்க.
அம்பலத்தின் மாடத்தில் விழி பார்வை.

பறக்கும் பட்சிகளின் அழகில்
அவள் நிறைந்திட.
செவியோரம் வீசும் காற்றின்
தீண்டலில் சிமிக்கியின் அசைவோ.
அவளை பேரழகாய்
புதுப்பித்தன பூந்தளிர் மழலையாய்.

ஓரமாய் இரசித்த காதலன்
தளியின் மாடத்தை இரசிக்கும்
தளிரே.
என்றுரைத்திட நாணி நலினமாய்
நகைத்தாள் மென் குரலில்..

கவிஞர் ச.கார்த்திகா

# மழலையின் கிறுக்கல்

சிற்பியின் கைகளில் அகப்பட்ட உளியை போல்,
சுவற்றை கண்டவுடன் மழலை மகிழ்ந்து
கிறுக்க தொடங்கி விட

தனக்கு மட்டும் புரியும் வகையில்
ஆசை தீர ஓவியம் ஒன்றை தீட்டி விட்டு

சிறகடிக்கும் பறவைபோல
கண் சிமிட்டி அச்சத்துடன் பார்க்கின்றாள்

வீடுசுவரில் வரைந்து வைத்த ஓவியத்திற்கு
அம்மாவின் பரிசு என்னவாக இருக்குமோ என்று!?



கவிஞர் மா.பாலகுமரன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -6

"என்னை அம்மான்னு கூப்புடறியா?"

"அம்மா நான் சிவாவைக் கட்டிக்கிறதிலே எனக்கு மிக்க சந்தோசம்."
"அப்படீன்னா சரி. நான் கோகுலம்மாளிடம் பேசுகிறேன்." என்றாள் ராணி.
"அம்மா அதற்கு முன்னாலே ஒரு சின்ன விஷயம்.", "என்னடி?"
"அந்தத் திவ்யாகிட்டே பேசணும்.", "அந்தக் குழந்தைக்கு என்னடி தெரியும். அது கிட்டே போய் என்ன பேசப் போறே?"
"நீ போய் அந்தக் குழந்தையை கொஞ்சம் தூக்கிண்டு வாயேன்"
"சரிம்மா. ஆனால் நீ பேசறது அந்தப் பொண்ணுக்கு என்னப் புரியப் போகுது?'
"நீ போய் அந்தக் குழந்தையைக் கொஞ்சம் தூக்கிண்டு வாயேன்"

%%%%%%%%

திவ்யா வந்ததும் "அத்தா சாக்லேட் குடு" என்று கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.
சாக்லேட் எடுத்துக் கொடுத்து கொடுத்து விட்டு "உனக்கு இந்தப் புவனா அத்தாவைப் பிடிக்குமா?" என்று கேட்டாள்.
"ஓ" , "எவ்வளவு பிடிக்கும்", கையை விரித்து இவ்வளவு பிடிக்கும் என்றது.
"என்னை அம்மான்னு கூப்புடறியா?" , "எதுக்கு?", "கூப்பிடுவிடுயா"......
"ம்கூம்.. எங்கம்மா கடவுள் கிட்ட பொம்மை வாங்க போயிருக்காங்க"
"இல்லேடி கண்ணு இனி நான் தான் உன் அம்மா"
"ம்கூம் நீ அத்தா. எங்கம்மா பொம்மை வாங்க போயிருக்கா"
"சரி. என்னை ஒருக்கா அம்மான்னு கூப்பிடேன். சாக்லேட் தர்றேன்"
"ம்கூம்... வேணும்னா சாக்லேட் குடு"
"புவனா அது சின்னக் குழந்தை. அது கிட்டேய் போய் நீ பேசிக்கிட்டிருக்கே கொஞ்சமா நீதான் அவள் கிட்டே எடுத்துச் சொல்லணும்" என்றாள் ராணியம்மை.
"பாரேன். இவ்வளவு பிடிவாதம் பிடிக்குதே. அடி வயிற்றைக் கலக்குதே"
"அப்படீன்னா சிவாவிற்கு வேறே பொண்ணு பார்க்கச் சொல்லிடுவோமா?" அம்மா சூசகமாக புவனாவின் மனத்தை அறிவதற்காக கேட்டாள்.
"திவ்யா சின்னப் பொண்ணு. அவளுக்கு என்ன தெரியும். நீ கல்யாணத் துக்கு நாள் பார்க்கச் சொல்."

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்றும் கவிதை

## அத்தியாயம் -6

## "என்னை அம்மான்னு கூப்புடறியா?"

"நல்ல பொண்ணு. இப்படித்தான் முழுசா முடிவெடுக்கப் பழகிக் கொள்ளணும். நான் இன்றைக்கே கோகுலம்மாவிடம் பேசுகிறேன்."
"சரிம்மா" என்று திவ்யாவை அம்மாவிடம் கொடுத்து சிவாவிடம் கொண்டு விடச்சொன்னாள்.
"திவ்யாவை நம் வீட்டிலே வைத்துக்கொள்வோமா?"
"வேண்டாம். திருமணத்திற்கு பிறகே அவள் என்னோடு இருப்பது நல்லது போல தோன்றுகிறது."
"ஏன் புவனா அப்படிச் சொல்கிறாய்"
"அவளுக்கு நான் இப்போது அத்தாவாகத் தான் தெரியும்?
"இப்போதே அவளைக் கொஞ்சம் கொஞ்சம் உன் பக்கம் சேர்த்துக் கொள்ளலாமே. அவள் மனசில் நீ பதியும் போது அவளுக்கு அம்மா நினைவு மறைந்து போகும். அவள் உன்னை அம்மான்னு சொல்லவும் தயாராகி விடுவா"
"இல்லேம்மா. சின்னக் குழந்தை மனசை அவ்வளவு எளிதில் மாற்றுவது கடினம். அதுவும் அம்மாவைப் பற்றிய எண்ணங்களை மாற்றுவது கடினம். அத்தோடு திருமணத்திற்கு முன்னால் திவ்யாவை நம் வீட்டில் வைத்திருந்தால் சிவா வேற மாதிரி நினைக்கக் கூடும்."
"பரவாயில்லே . ரொம்பா தீர்க்கமாயிருக்கே" என்று திவ்யாவைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள் ராணியம்மாள்.
"இந்தச் சின்ன ராட்சசியை எப்படிச் சமாளிக்கப் போகிரோம்" தலையை சிலுப்பிக் கொண்டாள் புவனா.

****************************

"கல்யாணத்தை ரொம்பா சிம்பிளாக வைத்துக் கொள்ளலாமே. வீண் ஆடம்பரம் வேண்டாம்"
"அதுவும் சரிதான். ஆனால் சிவா எங்க வீட்டிலே நடக்கிற முதல் கல்யாணம்"
"அத்தே எனக்குப் புரியுது. ஆனால் வீணாக ஆடம்பரமெல்லாம் வைத்து ஏன் களேபரம் பண்ணணும்னு பார்க்கிறேன். இதிலே நான் பூமாலை போட்டுக் கொண்டு புவனா கூட உட்கார்ந்திருக்க, திவ்யாவின் மனதில் விபரீதமாக எண்ணங்கள் எதுவும் எழுந்து விடக் கூடாதுண்ணு தான்.."
"எப்படியும் குழந்தைக்குத் தெரிந்துதானே ஆக வேண்டும்"
"அதற்காக இப்போது திடீரென்று ஒரு அதிர்ச்சி தர வேண்டாமே."

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

அத்தியாயம் -6

"என்னை அம்மான்னு கூப்புடறியா?"

" என் வீட்டில் எல்லோருக்கும் ஒரு நேர சாப்பாடாவது போட்டாகணும் மாப்பிள்ளை"

"ம்... ம்... சரி. இப்படிச் செய்வோமே. நம்ம ஊர்க் கோயிலிலே சின்னதாக் கல்யாணச் சடங்குகளை முடிச்சுக்குவோம். அப்புறம் உங்க வீட்டிலே எல்லோ ரையும் கூப்பிட்டு பப்படம் பாயாசத்தோட விருந்தே போட்டுருங்க"

"அதுவும் சரிதான், மாப்பிள்ளை"

"அதனால்தான் நீங்க கார்டெல்லாம் அடிக்க வேண்டாம்னு சொல்றேன்"

"சரி. நான் சொந்தக்காரங்களுக்கு நேரிலே போய் சொல்லிக் கொள்கிறேன். வரட்டுமா?"



தொடரும் ...

இரஜகை நிலவன்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# பெருந்தகை மு.வரதராசனார்

கட்டுரை

## பிறப்பு



வடஆற்காடு மாவட்டம், வேலம்கிராமம். தந்தை முனுசாமி, தாய் அம்மாக்கண்ணு அவர்களுக்கு 25.04.1912-ல் திருவேங்கடம் மூன்றாவது பிள்ளையாக பிறந்தார். இளமையில் தன் தாய்வழிப்பாட்டி நரசிம்மாவிடம் வளர்ந்தார். அந்த காலத்தில் தாத்தாவின் பெயரைப் பேரனுக்கு சூட்டும் வழக்கம் இருந்தது. அந்த மரபுப்படி திருவேங்கடம் வரதராசன் ஆனார்.

## தொடக்கக் கல்வி

மு. வரதராசனார் தொடக்கக் கல்வியை சொந்த ஊரிலேயே கற்றார். பின் வாலாசாவில் கல்வி கற்றார். திருப்பத்தூரில் உள்ள நகராட்சிப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் கற்றுத்தேர்ந்தார். முருகைய்ய முதலியார் என்பவரிடம் ஆர்வமுடன் தமிழ் கற்றார்.

## எழுத்தர் பணி - போனால் போகட்டும்

பள்ளி இறுதித்தேர்வில் வெற்றியடைந்தும் படிக்க பணவசதி இல்லாத காரணத்தால் 1928-இல் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார்.

ஒரு சமயம் அரசு கடிதம் ஒன்றை திருப்பத்தூரிலிருந்து வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் நேரில் கொடுக்கவேண்டிய பணி வரதராசனிடம் கொடுக்கப்பட்டது. வேலூருக்குச் செல்லும் முன் "வெள்ளைக்கார அதிகாரிகள் நீ அணிந்திருக்கும் கதராடையால் உனக்குத் தொந்தரவு தரலாம்" என்று உடன் பணிபுரிந்த நண்பர்கள் எச்சரித்தனர். அதற்கு அவர், "வேலை போனால் போகட்டும். என் கதர் ஆடையை மட்டும் மாற்றமாட்டேன்" என்று உறுதியாகக் கூறினார். 1931-ல் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டு எழுத்தர் வேலையை கைவிட்டார். பின்பு நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் சிறப்பாகப் பணியாற்றினார்.

அ வில்சன்,இதழாசிரியர்

# பெருந்தகை மு.வரதராசனார்

கட்டுரை

**திருமணம்**

1935-ஆம் ஆண்டு, தைத்திங்கள் 23 ஆம் நாள் வரதராசனுக்கு திருமணம் நடைபெற்றது. மாமனார் சாரங்கபாணி மருமகனுக்கு விருந்து வைத்து துணி எடுத்துக்கொள்ள ரூ. 50 கொடுத்தார், அதில் ரூ. 30-க்கு கதராடை எடுத்துக் கொண்டு மீதி ரூ. 20-ஐ மாமனாரிடமே, "போதும்மாமா, துணி எடுத்துவிட்டேன்' என்று திருப்பிக்கொடுத்துவிட்டார்.

**உலாவச் செல்லுதல்**

வரதராசன் மாலையில் தவறாமல் நடைபயிற்சி செய்வார். அப்போது கையில் ஒரு பை வைத்திருப்பார். அதில் திருக்குறள், திருவாசகம் அல்லது வேறு நூல்கள் இருக்கும். ஊருக்கு அப்பால் தனி இடம் தேடிச்செல்வார். அங்கு அமைதியாக அமர்ந்து கொண்டு வந்த நூல்களைப் படிப்பார்.

**முதல் டாக்டர் பட்டம்**

1948-ஆம் ஆண்டு 'சங்க இலக்கியத்தில் இயற்கை' என்னும் தலைப்பில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றார். சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் முதன்முதலில் டாக்டர் பட்டம் பெற்றவர் மு.வ. அவர்களேயாகும்.

**மனைவியின் உதவி**

வரதராசனார் புத்தகம் எழுதுவதற்கு அவர் மனைவி இராதா மிகவும் உதவினார். அவர் ஊருக்கும், வெளி இடங்களுக்கும் சென்றுவந்ததை தன்கணவரிடம் சொல்வார். அந்த செய்திகளுடன் கதை அமைத்து எழுதுவார். அப்படி எழுதப்பட்டதே 'செந்தாமரை' என்னும் முதல் நாவல் ஆகும். அதை புத்தகமாக வெளியிட ஆசை கொண்டார். பதிப்பகத்தாரிடம் நாவலைக் காட்டி பதிப்பிக்கக்கேட்டார். அவர்கள் தயக்கமும், கால தாமதமும் செய்தனர். இராதா, "நீங்கள் ஏன் அவர்களிடம் போய் நிற்க வேண்டும்? நீங்களே வெளியிடுங்கள். செலவுக்கு என் நகைகளைத் தருகிறேன்" என்று கூறி தன் நகைகளை கழற்றி அவரிடம் கொடுத்தார்.

அ வில்சன்,இதழாசிரியர்

# பெருந்தகை மு.வரதராசனார்

கட்டுரை

## இலக்கியப் பேரறிஞர்

மு. வரதராசனார் 1972-ஆம் ஆண்டு அமெரிக்கா ஊஸ்டர் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பல இலக்கிய திறனாய்வுகளைச் செய்தார். அங்குள்ள அறிஞர்கள் 'இலக்கிய பேரறிஞர்' என்ற பட்டத்தை வழங்கி பாராட்டினர். அமெரிக்க பல்கலைக் கழகத்தில் டி.லிட். பட்டம் பெற்ற முதல் தமிழர் மு.வரதராசனார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த்துறைத் தலைவர்

சென்னைப்பல்கலைக்கழகத்தில் சொல்லின்செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 25 ஆண்டுகள் பணியாற்றி 1961-இல் ஓய்வு பெற்றார். அடுத்துதான் பணியாற்றிய இடத்திற்கு பணிபுரிய யார் வருவாரோ என எண்ணி மருத்துவமனையில் வருந்திக்கொண்டிருந்தார். அப்போது வரதராசனார் அவரைப் பார்க்க மருத்துவமனைக்கு சென்றார், வரதராசனாரிடம் தன் மனக்கவலையைக் கூறினார். "வரதராசன், தாங்கள் என் இடத்திற்கு வரவேண்டும். நான் விட்டுவந்த பணிகளைச் செய்துமுடிக்க தகுதியானவர் தாங்களே" என்றார்.



பச்சையப்பன் கல்லூரியை விட்டு பிரியமனமில்லாத வரதராசனாருக்கு சேதுப்பிள்ளை இடைவிடாது அழைத்த காரணத்தினால் சென்னைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் தலைவராக 1961-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார்.

அ வில்சன்,இதழாசிரியர்

# பெருந்தகை மு.வரதராசனார்

கட்டுரை

**மு. வரதராசனாரின் படைப்புகள்**

**விருது பெற்ற நூல்களின் பட்டியல்**




1. அகல் விளக்கு - சாகித்ய அகாதெமி விருது
2. கள்ளோ காவியமோ - தமிழகஅரசு விருது
3. அரசியல் அலைகள் - தமிழக அரசு விருது
4. மொழியியல் கட்டுரைகள் - தமிழக அரசு விருது

**தமிழ்வளர்ச்சிக் கழக பாராட்டுப் பத்திரம் பெற்ற நூல்கள்**

1. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் 2.மொழி நூல் 3. கள்ளோ காவியமோ 4. அரசியல் அலைகள் 5. விடுதலையா 6. ஒவாச்செய்தி.

புதினங்கள், சிந்தனைக் கதைகள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், இலக்கிய நூல்கள், சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம், பயண இலக்கியம், இலக்கிய வரலாறு, மொழியியல், வாழ்க்கை வரலாறு, ஆங்கில நூல்கள், சிறுவர் இலக்கண நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என இவர் எழுதிய மொத்த நூல்கள் எண்பத்திஐந்து ஆகும்.

"ரோஜாப்பூ, வாடிவிடும் சண்பகப்பூ வாடிவிடும்
மல்லிகைப்பூ வாடிவிடும் முல்லைப்பூ வாடிவிடும்
வாடாதபூ எதுவோ வளருகின்ற இடம் அறிந்தேன்
வாடாதபூ படிப்பு வளரும் இடம் பள்ளிக்கூடம்."

**பதவிகள்**

1. சாகித்ய அகாதெமி, 2. பாரதிய ஞானபீடம், 3. தேசிய புத்தகக்குழு, 4. இந்திய மொழிக்குழு, 5. சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில, தமிழ் அகராதிக்குழு, 6. நாட்டுப் புறப்பாடல்களும், நடனங்களும் பற்றிய குழு, 7. தமிழ்நாடு அரசுப்பணியாளர்தேர்வு ஆணைக்குழு, 8. ஆந்திரப்பிரதேச அரசுப்பணியாளர் தேர்வுக்குழு, 9. மத்திய அரசுபணியாளர் தேர்வு ஆணைக்குழு, 10. தமிழ்நாடு புத்தகவெளியீட்டுக்கழக உறுப்பினர், 11. ஆட்சி மொழிக்குழு, 12.ஆட்சிமொழி சட்டக்குழு, 13. தமிழ் வளர்ச்சிக்கழகக்குழு.14.தமிழ் கலைமன்றக்குழு உறுப்பினர், 15. தமிழிசைச் சங்க உறுப்பினர், 16. மாநில வரலாற்றுக் குழு, 17. தமிழ்கலைக் களஞ்சியம், 18. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். 19. சென்னை, அண்ணாமலை, வெங்கடேசுவரா ஆகிய பல்கலைக்கழகங்களில் பேரவை (செனட்) உறுப்பினராகப் பணிபுரிந்தார். 20. கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களுரு.

அ வில்சன்,இதழாசிரியர்

# பெருந்தகை மு.வரதராசனார்

கட்டுரை

**வீணாக்காதீர்**

டாக்டர் மு.வ. குணத்தில் இமயம் போன்றவர். நல்லாசிரியர் தகுதியுடையவர்; உழைப்பால் உயர்ந்தவர்; தமிழ் அறிஞர்களால் மதிக்கப்படுபவர்; கடமை தவறாதவர். காலத்தைப் பொன்போன்று காப்பவர், "தயவுசெய்து ஐந்து நிமிடங்களுக்கு மேல் என் நேரத்தையும், உங்கள் நேரத்தையும் வீணாக்கவேண்டாம்" என்று அலுவலகத்தில் எழுதி வைத்திருந்தார்.

**மறைவு**

"என் கடைசி மூச்சு உள்ளவரையில் ஏதாவது எழுதிக்கொண்டிருப்பேன். எழுதமுடியாதபோது சொல்லிக்கொண்டாவது இருப்பேன்" என்று மேடையில் முழங்கிய மு.வரதராசனாருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. நாடித்துடிப்பு அதிகமானது. "ஓ! என்னுடைய இதயம் என்னோடு பேசுகிறது. அது என்னென்ன பேசுகிறது என்பதையெல்லாம் குறித்து வைக்கவேண்டும். தாளும், பேனாவும் தாருங்கள்" என்று மருத்துவமனையில் இருந்தபடி கேட்டார். 10.10.1974-ல் சென்னையில் இயற்கை எய்தினார்.



**நன்றி :**


1. தமிழ் வளர்த்த தமிழர்கள் - தா.ஸ்ரீனிவாசன்
2. மூவா நினைவுகள், ம. ரா. போ. குருசாமி


அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
வண்ணங்களில் இல்லை
வாழ்க்கை!
நம் எண்ணங்களில் உள்ளது
அழகிய வாழ்க்கை!!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com